NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 10 September 2022

# ஆய்வு: கொவிட்-19 சவால்களை மூத்தோர் நன்கு கையாண்டனர்

கொவிட்-19 கொள்ளைநோய்ப் பரவலால் வீட்டில் அதிக நேரம் செலவிடவேண்டியிருந்ததால் மூத்தோர் மனதளவில் பாதிக்கப்பட்டிருந்தனர்; ஆனால் அதற்குப் பிறகு தங்களின் உடல்நலனையும் மனநலனையும் நன்கு பேணிக்கொண்டதாக 'என்யுஹெச்எஸ்' எனும் தேசிய பல்கலைக்கழக சுகாதார முறை மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதன் தொடர்பில் சிங்கப்பூரில் மூத்தோரிடையே நல்ல விழிப்புணர்வு காணப்பட்டதுடன் சொந்தமாக இயங்கும் ஆற்றல் போன்றவை இருந்ததாகவும் ஆய்வு தெரிவித்தது. குடும்பத்தார், அதிலும் குறிப்பாக பெரியவர்களாக வளர்ந்த மூத்தோரின் பிள்ளைகள், சமூக சேவையாளர்கள் ஆகியோர் வழங்கிய ஆதரவே மூத்தோர் மீள்திறனுடன் இயங்க முடிந்ததென ஆய்வு காட்டியது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.